# 2 ஐந்நூல் (பஞ்சாகமம்)

திருவிவிலியத்தின் முதல் ஐந்து நூல்களும் ஐந்நூல் (பஞ்சாகமம்) என அழைக்கப்படுகின்றது. ஐந்நூல் (பஞ்சாகமம்) வேறு பெயர்களிலும் அழைக்கப்படுகின்றது. அவையாவன;

- ★ தோரா
- ★ பஞ்சாகமம்
- ★ சட்டம்
- ★ மோசேயின் சட்டம்

எபிரேய மொழியில் இந்நூல் "தோரா" என அழைக்கப்படுகின்றது. ஐந்நூல் என அழைக்கப்படும் இந்நூல்கள் ஐந்தினதும் பெயர்கள் பின்வருமாறு.




## தொடக்க நூல்

திருவிவிலியத்தின் முதலாவது நூல் இதுவாகும். இறைவன் தனது அளப்பரிய அன்பினாலும் இரக்கத்தினாலும் மனிதனைப் படைத்தல், பாவத்தில் விழுந்த மனிதனை மீட்பதற்காக "இஸ்ராயேல்" இனத்தைத் தெரிந்தெடுத்தல், அவர்களின் தந்தையருக்குக் கொடுத்த வாக்குறுதிகளை நிறைவேற்றுதல் என்பன இங்கு விவரிக்கப்பட்டுள்ளன. இதனைப் படித்து இறைவனின் அன்பைப் புரிந்துகொண்டு, நாம் ஒருவரோடு ஒருவர் அன்புடன் செயற்பட வேண்டுமென்பதை விளங்கிக்கொள்வோம்.

## தொடக்க நூலில் உள்ள விடயங்களின் சுருக்கம்.

- ★ கடவுள் உலகையும் மனிதனையும் படைத்தல்.
- ★ ஆதாமும் ஏவாளும் பாவத்தில் விழுதல்.
- ★ காயீன், ஆபேல் கதை.
- ★ நோவாவும் வெள்ளப் பெருக்கும்.
- ★ மனிதனால் கட்டப்பட்ட பாபேல் கோபுரம்.
- ★ குலமுதுவர்களான ஆபிரகாம், ஈசாக்கு, யாக்கோபு, மக்கள் தலைவன் யோசேப்பு ஆகியோர் இறைவன் மீது கொண்டிருந்த நம்பிக்கை.

## விடுதலைப் பயண நூல்



படம் 2.1 - விடுதலைப் பயணம்

திருவிவிலியத்தின் இரண்டாவது நூல் இதுவாகும். இஸ்ரயேல் வரலாற்றின் முக்கிய நிகழ்ச்சியான எகிப்திய அடிமைத் தனத்திலிருந்து மீட்டல், வாக்களிக்கப் பட்ட நாட்டை நோக்கிய **'விடுதலைப் பயணத்தை'** முதன்மையாகக் கொண்டு எழுதப்பட்டுள்ளது.

மோசே இங்கு முக்கிய இடத்தினை வகிக்கின்றார். இஸ்ரயேல் மக்கள் விடுதலைப் பயணத்தின்போது இறைவனின் அன்பையும் பராமரிப்பையும் கண்டுணர்ந்த விதம் இங்கு விவரிக்கப்பட்டுள்ளது. "சீனாய்" உடன்படிக்கையின்மூலம் **"பத்துக்கட்டளைகள்"** பெற்றுக் கொடுக்கப்பட்டு இறைவனால் தமது மக்களென "இஸ்ரயேல் மக்கள்" ஏற்றுக் கொள்ளப்பட்டமை இங்கு குறிப்பிடப்படுகின்றது.

## விடுதலைப் பயண நூலில் உள்ள விடயங்களின் சுருக்கம்

- ★ பார்வோன் மன்னன் இஸ்ரயேல் மக்களைத் துன்புறுத்துதல்.
- ★ இறைவன் இஸ்ரயேல் மக்களைப் பார்வோன் மன்னனிடமிருந்து விடுவித்து வாக்களிக்கப்பட்ட நாட்டுக்கு அழைத்துச் செல்லல்.
- ★ இப்பயணத்தின் இடையில் சீனாய் மலையில் பத்துக் கட்டளைகளைக் கொடுத்தல்.
- ★ மோசேயின் தூதுப் பணி

இஸ்ரயேல் மக்கள் இறையன்பை கண்டுணர்ந்த விதத்தினைப் போன்று இன்று இறைவன் எம்மையும் அதனைக் கண்டுணருமாறு அழைக்கின்றார். நாமும் இறைவனுக்கு அன்பு செலுத்த மறவாதிருப்போம்.

## செயற்பாடு

(1) இப்படத்தை பயிற்சிப் புத்தகத்தில் பிரதி செய்து பூரணப்படுத்தவும்.




(2) (i) திருவிவிலியத்தின் ஐந்நூல் தவிர வேறு ஏதும் ஐந்து நூல்களின் பெயர்களை எழுதுக.

(ii) திருவிவிலியத்தின் தொடக்க நூலைப் புரட்டி அறிமுகத்தை வாசித்து, அதனை ஐந்து வசனங்களில் எழுதுக.

(iii) திருவிலியத்தின் விடுதலைப் பயண நூலைப் புரட்டி, அறிமுகத்தை வாசித்து ஐந்து வசனங்கள் எழுதுக.

**வாழ்க்கைக்கு........**

*அனைத்தையும் படைத்த கடவுளைப் புகழுங்கள்.*